



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.1.2025) உலகப் புகழ்பெற்ற மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கதமிழ்ச்செல்வன், மரு.ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா ஆகியோர் உடனிருந்தனர்.

### உலகப் புகழ் பெற்ற

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு; துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்து பார்வையிட்டார்!

## தங்க மோதிரங்கள்– தங்க காசுகள்– டிராக்டர் –கார் பரிசு! பல்லாயிரக்கணக்கானோர் நேரில் பார்த்து உற்சாகம்!

**மதுரை, ஜன.17-**

**மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் தமிழர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு நேற்று நடைபெற்ற இந்த புகழ்மிக்க ஜல்லிக்கட்டு விழாவை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து நேரில் பார்வையிட்டு பரிசுகள் வழங்கினார்.**

உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வியாழக்கிழமை காலை 8.15 மணியளவில் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

அதை தொடர்ந்து முதலாவதாக கோவில் மரியாதை காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. பின்னர் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 1000க்கும் மேற்பட்ட ஜல்லிக்கட்டு காளைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவிழ்த்து விடப்பட்டன.

வாடிவாசலிலிருந்து துள்ளிக்குதித்து வெளியேறிய காளைகள் சில சீறிப்பாய்ந்து பாராட்டை பெற்றது. சீறிப்பாய்ந்து வந்த காளைகளை காளையர்கள் திமிலை பிடித்து அடக்கி தங்களது வீரத்தை நிரூபித்தார்கள்.

உற்சாகத்துடன் நடைபெற்ற சிறப்புமிக்க இந்த ஜல்லிக்கட்டு விழாவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆர்வத்துடன் கண்டு ரசித்தார், இவருடன் இன்பநதி அவர்களும் ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்தார்.

சிறந்த காளைகளுக்கும், சிறந்த காளையர்களுக்கும் ஒரு சவரன் எடை கொண்ட தங்க மோதிரங்கள் மற்றும் தங்க காசுகள், சைக்கிள்கள், பீரோ, கட்டில் என விலை உயர்ந்த பொருட்கள் பலவற்றை பரிசாக நேரில் வழங்கி பாராட்டி வாழ்த்தினார்.

இவ்விழாவிற்கு வருகை புரிந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை விழா மேடையில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொன்னாடை போர்த்தி வரவேற்றார்.

தொடர்ந்து சுமார் மூன்று மணி நேரம் ஜல்லிக்கட்டு விழாவை கண்டு மகிழ்ந்தார்.

முன்னதாக துணை முதல்வருக்கு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வழிநெடுகிலும் பல்லாயிரக்கணக்கானோர் இரு வண்ணக்கொடிகளையும், வரவேற்பு பதாகைகளையும் கையில் ஏந்தியும் உற்சாகமான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இந்த சிறப்புமிக்க ஜல்லிக்கட்டு விழாவில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், தேனி நாடாளுமன்ற உறுப்பினர், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மாநில இளைஞரணி அணி செயலாளர்கள் ஜி.பி.ராஜா இன்பா ஏ.என்.ராகு மற்றும் அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பெரும் திரளானோர் பங்கேற்றார்கள்.

போட்டியில் பங்கேற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழா கமிட்டி சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இந்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறப்பாக விளையாடி தேர்வான ஜல்லிக்கட்டு காளைக்கு அதன் உரிமையாளருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக டிராக்டர் பரிசாக வழங்கப்பட்டது. அதே போன்று சிறந்த மாடுபிடி வீரருக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பாக சொகுசு கார் பரிசாக வழங்கப்பட்டது.

போட்டியை காண தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் பல்லாயிரக்கணக்கில் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்.

விழாவை துவக்கி வைத்து விட்டு புறப்பட்டுச் சென்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தபோது சிறப்பான ஜல்லிக்கட்டு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பாராட்டு தெரிவித்தார்.

# இசைக் கல்லூரி வளாகத்தில் ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’

## கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் பார்வையிட்டார்!

*சென்னை, ஜன. 17-*

*இசைக் கல்லூரி வளாகத்தில் நடந்த சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர் சந்தரமோகன் கலந்து கொண்டு கலைஞர்களை வாழ்த்தினர்.*

*சென்னையில் தை மாதம் தொடக்கத்தில் பொங்கல் நாட்களில் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா கலைநிகழ்ச்சிகளை சென்னையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 13ம் தேதி கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்திடலில் தொடங்கி வைத்தார்.*

*முதல்வர் 260 கலைஞர்கள் பிரமாண்ட மேடையில் வழங்கிய நிகழ்ச்சியை முழுவதும் கண்டுகளித்து, நிகழ்ச்சி நடத்திய கலைஞர் களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி பாராட்டினார். தொடக்க விழா நிகழ்ச்சியை 4000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் நேரிலும், இணையம் மற்றும் தொலைக்காட்சி வாயிலாக 1,00,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண்டு களித்தனர்.*

*சென்னையின் 18 இடங்களில் நாட்டுப்புற கலைகளை ஊக்குவிக் கும் வகையில் கடந்த 14ம் தேதி முதல் நாளை வரை நடத்தப்படும் நிகழ்ச்சியில் 750 நாட் டுப்புறக் கலைஞர்கள், 8 பரத நாட்டிய குழுக்கள், 8 குரலிசை குழுக்கள், 16 இசைக் குழுக்கள், 6 அயல் மாநிலக் கலைக்குழுக்கள் என 1000க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற் கின்றனர்.*

*சென்னை, கிண்டி கததிப்பாரா சந்திப்பில் நடந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சாமிநாதன், தா.மோ. அன்பரசன் ஆகியோரும் பார்வையிட்டு கலைநிகழ்ச்சிகள் வழங்கிய கலைஞர்களை பாராட்டினர். கீழ்ப்பாக்கம், ஏகாம் பரநாதர் திடலில் நடந்த நிகழ்ச்சியில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு, நிகழ்ச்சி வழங்கிய கலைஞர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.*

*அண்ணாநகர் கோபுர பூங்காவில் நடந்த நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர் சந்தரமோகன் கலந்துகொண்டு, கலைஞர்களை ஊக்கப்படுத்தினார்.*

*சென்னை இசைக்கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சிகளை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநதி அவர்கள் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர் சந்தரமோகன் கலந்து கொண்டு கலைஞர்களை வாழ்த்தினர்.*

*விழா நடைபெறும் இடங்களில் பிரபல உணவகங்களின் சுவையான உணவு வகைகள் விற்பனை செய்யும் உணவு திருவிழாவும் நடத்தப்படுகிறது. பூம்புகார் நிறுவனத்தின் வாயிலாக விற்பனைக் கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடி மகிழும் வாய்ப்புகளையும் பார்வையாளர்களுக்கு வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*சென்னை சங்கமம் நிகழ்ச்சியை திரளான பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புதுறையின் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் நேரலையிலும், யூடியூப் வாயிலாக இணையத்திலும் ஒளிபரப்பப்படுகிறது.*

*18 இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை ஒவ்வொரு இடங்களிலும் 1000க்கும் மேற்பட்டவர்கள் நேரிலும் முகநூல், இன்ஸ்டாகிராம், டிவிட்டர், யூடியூப் வாயிலாக 3 லட்சம் மக்களும் கண்டு ரசித்தனர்*

### துபாய் கார் ரேஸ்

# நடிகர் அஜித்குமார் குழுவிற்கு மூன்றாவது இடம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜன.17-

துபாய் கார் பந்தயத்தில், நடிகர் அஜித்குமார் அவர்களின் அணி 3-வது இடம் பிடித்துள்ளது.

அதனையடுத்து - துணை முதல்வர் அவர்கள், அஜித்குமார் மற்றும் அவரது அணிக்கு, தமது வாழ்த்தினைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் துணை முதல்வர் அவர்கள், “இந்தப் பந்தயத்தில் திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு விளையாட்டுத் துறை லோகோவை பயன்டுத்தியதற்காக அஜித்குமார் ரேஸிங் அணிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

துணை முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**“2025 துபாயில் நடைபெற்ற 24H கார் ரேஸ் 991 பிரிவில் அஜித்குமார் மற்றும் அவரது குழுவினர் மூன்றாவது இடத்தைப் பிடித்ததை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்காக அஜித்குமார் மற்றும் அவரது குழுவினருக்கு எனது மன மார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**அதுமட்டுமில்லாமல் அஜித்குமார் ரேஸிங் அணி திராவிட மாடல் அரசை காட்சிப்படுத்தும் விதமாக தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் லோகோவை கார் ரேஸின்போது பயன்படுத்தியதற்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.**

**தொடர்ந்து பல வெற்றிகளை பெற்று நமது தேசத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் மென்மேலும் பெருமை சேர்க்க வேண்டுமென அஜித்குமார் மற்றும் அவரது குழுவை வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு அவர், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### இதுவரை ரூ. 6 கோடியே 15 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது

### 2012 சூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது.

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.**

**வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.**

**2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ.6 கோடியே 15 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 16-01-2025 அன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.**

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பழனிவேல், தாழம்பட்டு, மாளிகம்பட்டு அஞ்சல், பண்ருட்டி, கடலூர் மாவட்டம். | 25,000/- |
| 2. | மாதவரம் எம்.பி.நடராசன், பொன்னியம்மன்மேடு, சென்னை. | 25,000/- |
| 3. | ஆர். அண்ணாமலை, திரியாலம் அஞ்சல், திருப்பத்தூர் மாவட்டம். | 25,000/- |
| 4. | செல்லப்பன், அருகாவூர் அஞ்சல், பெரும்பள்ளம், திருவண்ணாமலை மாவட்டம் | 25,000/- |
| 5. | எஸ்.இராமதாஸ், நெடிமோழியனூர், மயிலம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் | 25,000/- |
| 6. | இருசன், காட்டுக்கொட்டகை, எடுத்தவாய்நத்தம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி | 25,000/- |
| 7. | என்.அகமது கபீர், புதுவலசை, மண்டபம், இராமநாதபுரம் மாவட்டம். | 25,000/- |
| 8. | எம்.பொன்னுச்சாமி, வார்டு19, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம். | 25,000/- |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |